## 29.29 மக்கள் நலப் பணியாளர்களுக்கு மதிப்பூதியத்தை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக வழங்காமல் சம்பந்தப்பட்ட ஊராட்சி தலைவர்கள் மூலமாக உரிய காலத்தில் வழங்குதல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 54 நாள் : 2.4.2007

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 51, ஊவ(ம)ஊ(இ5) துறை, நாள 12.6.06.
2. அரசாணை (நிலை) எண். 147, ஊவ(ம)ஊ(இ5) துறை, நாள 12.10.06.
3. அரசாணை (நிலை) எண். 176, ஊவ(ம)ஊ(இ5) துறை, நாள 5.12.06.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் நேர்முக கடித எண். 41724/06/இ1, நாள 9.3.07

**ஆணை**

படிக்கப்பட்ட 1ல் காணும் அரசாணையில் மக்கள் நலப் பணியாளருக்கான பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டதில், மற்றெல்லாவற்றுடன் பத்தி 7(6) ல் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

“இப்பணிக்கு நியமிக்கப்படுவோர் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில், மதிப்பூதியம் மட்டும் பெறும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆவார்கள். இவர்கள் செய்யும் சேவைக்காக மதிப்பூதியமாக மாதம் ரூ.950/– ம், பயணப்படியாக மாதம் ரூ.50/– ம் ஆக மொத்தம் ரூ.1000/– அந்தந்த ஊராட்சி மூலம் வழங்கப்படும். இதற்காக ஏற்படும் ஆண்டு செலவினம் ரூ.15,1416 கோடியாகும். நடப்பு நிதியாண்டில் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10,0944 கோடியாகும். இதற்காக ஊராட்சிகள் செய்யும் செலவுக்காக ஒரு பணியாளருக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.1000/– வீதம் அரசு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நிதி உதவி வழங்கும். இவை மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்பட்டு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும். 1.6.2001 முதல் 31.5.2006 வரை இவர்கள் பணிபுரியாத காலத்திற்கு எந்தவிதமான தொகுப்பூதியமும் வழங்கப்பட வேண்டியதில்லை”.

2. படிக்கப்பட்ட 4ல் காணும் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களுடன், மக்கள் நலப் பணியாளர் தொடர்பான விபரங்களை மறுபரிசீலனை செய்தபோது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மக்கள் நலப் பணியாளர்களுக்கான மதிப்பூதியத்தை ஊராட்சிகளால் பெற்று வழங்குவதில் அதிக கால தாமதம் ஏற்படுவதாகவும் இதனை போக்கும் வகையில் மக்கள் நலப்பணியாளர்களுக்கான மதிப்பூதியத்தை உரிய காலத்தில் வழங்க, அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மதிப்பூதியத் தொகையினை கணக்குத் தலைப்பு எண். “2515–00–800–ஹநு னுஞஊ ஊடினநு சூடி. 3347” மூலம் காலாண்டுக்கு ஒருமுறை பெற்று ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செலுத்தாமல் நேரிடையாக கணக்குத் தலைப்பு எண்.2 (குறிப்பிட்ட ஒதுக்கீட்டு மான்யக் கணக்கு) சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு செலுத்த ஆணையிடவும், ஒருதடவை மதிப்பூதியமானது மேற்காணும் குறிப்பிட்ட ஒதுக்கீட்டு மான்ய கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டால், ஊராட்சித் தலைவர்கள் அதனை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (ஊராட்சிகள்) அதிகாரத்தினை பெற்று மாதாமாதம் அக்கணக்கிலிருந்து தொகையினை பெற்று உரிய நேரத்தில் மதிப்பூதியத் தொகையினை மக்கள் நலப் பணியாளர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்து படிக்கப்பட்ட 1 ல் ஆணைக்கு திருத்தம் வெளியிடுமாறு கூறியுள்ளார்.

3. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்கு பின்பு படிக்கப்பட்ட 1 ல் காணும் ஆணையில் பத்தி 7 (6) ற்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

### திருத்தம்

அரசாணை (நிலை) எண். 51, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள 12.6.06, பத்தி 7(6)–ல் கண்டுள்ள,

“இவை மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்பட்டு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும்”

என்பதற்கு பதிலாக,

“இவை மாவட்ட ஆட்சித் தலைவரால் காலாண்டுக்கு ஒரு முறை கணக்குத் தலைப்பு எண் “2515–00–800 AE 33 தொழில்முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04. ஒப்பந்த ஊதியம் DPC Code No. 3347”–ன் மூலம் பெற்று சம்பந்தப்பட்ட ஊராட்சியின் கணக்குத் தலைப்பு எண். 2 ல் நேரிடையாக செலுத்தப்பட வேண்டும் (மானியத் தொகைக்காக ஒதுக்கப்பட்டது)”. என்ற வரிகள் சேர்க்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்